# செய்தி வெளியீடு

**எண்:** **நாள்: 19.05.2026**

**மாண்புமிகு எரிசக்தி வளம் மற்றும் சட்டத்துறை அமைச்சர் திரு. சி.டி.ஆர். நிர்மல் குமார் அவர்கள் இன்று (19.05.2026) தமிழ்நாடு மின்சார வாரிய தலைமை அலுவலகத்தில் செயல்பட்டுவரும் மாநில மின் பகிர்ந்தளிப்பு மையம் மற்றும் 24X7 மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மையமான "மின்னகம்" ஆகியவற்றை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.**

இன்று (19.05.2026) சென்னை, தமிழ்நாடு மின்சார வாரிய தலைமை அலுவலகத்தில் செயல்பட்டு வரும் "**மாநில மின் பகிர்ந்தளிப்பு மையம்**" மற்றும் 24X7 இயங்கி வரும் மின்நுகர்வோர் சேவை மையமான "**மின்னகம்**" ஆகிய இடங்களில் மாண்புமிகு எரிசக்தி வளம் மற்றும் சட்டத்துறை அமைச்சர் திரு. சி.டி.ஆர். நிர்மல் குமார் அவர்கள் ஆய்வு செய்து, மே மாத கடும் கோடை வெப்பம் காரணமாக தற்போது நிலவும் மாநிலத்தின் ஒட்டு மொத்த மின் தேவை மற்றும் மின் உற்பத்தி ஆகிய விவரங்களை கேட்டறிந்தார்.

பின்னர், மின்னகத்தில் பதிவான மின்சாரம் தொடர்பான பொதுமக்களின் புகார்கள் மற்றும் அதன்மீது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள்குறித்து நேரடி ஆய்வு மேற்கொண்டார். மின்னகத்தில், பொதுமக்களிடமிருந்து புகார்களை பெறுவதற்காக, 3 முறைப்பணிகளில், ஒவ்வொரு முறைப்பணிக்கும் 5 மேற்பார்வையாளர்கள் உட்பட 95 பணியாளர்களை கொண்டும், தமிழ்நாடு மின் பகிர்மான கழகத்தின் கீழ் இயங்கிவரும் 45 மின்பகிர்மான வட்டங்களில் சென்னையில் உள்ள 5 மின் பகிர்மான வட்டங்களில் 7 பணியாளர்கள் வீதம் 35 பணியாளர்களும், மீதமுள்ள 40

மின்பகிர்மான வட்டங்களில் நாள் ஒன்றிற்கு 4 பேர்வீதம் 160 பணியாளர்களைக் கொண்டும் 24x7 மணிநேரமும் இயங்கி வருவதையும், புகார்கள் கையாளப்படும் விதம் மற்றும் எடுக்கப்படும் நடவடிக்கைகளின் தரத்தினை உறுதி செய்திட நாள் ஒன்றிற்கு 5 பேர் பிரத்யேகமாக தர சரிபார்ப்பாளர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு எடுத்துரைக்கப்பட்டது.

மேலும், மின்னகம் தொடங்கப்பட்டதிலிருந்து இதுவரை பெறப்பட்டுள்ள 45,04,037 புகார்களில் 44,87,883 புகார்கள் (99.64%) மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பதிவாகும் புகார்கள் மீது உடனுக்குடன் நடவடிக்கை எடுக்கப்பட்டு, ஒவ்வொரு புகாரும் உடனடியாக சரிசெய்யப்பட்டு, புகார் குறித்த உண்மைத்தன்மை சம்பந்தப்பட்ட புகார்தாரரிடம் அலைபேசி மூலம் உறுதி செய்யப்பட்ட பின்னரே புகார்கள் முடிக்கப்படுகின்றன.

இந்த ஆய்விற்குப் பின், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உயர் அலுவலர்களுடனான ஆய்தொடர்ச்சியாக மின்தடங்கல் ஏற்படும் இடங்களில் சிறப்பு கவனம் செலுத்தி அதற்கான காரணத்தை கண்டறிந்து உடனுக்குடன் சரிசெய்யுமாறும், பொதுமக்களிடமிருந்து பெறப்படும் புகார்கள் குறித்து உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறும், தடையில்லா, சீரான மின்சாரம் தொடர்ந்து கிடைப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்.

மாநிலத்தின் மின்சாரத் தேவை மற்றும் மின் விநியோகத்தில் எவ்வித இடைவெளியும் இன்றி, மாநிலம் முழுவதும் தடையில்லா, சீரான மும்முனை மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. தற்போதைய கோடைகால மின்

தேவை மற்றும் எதிர்வரும் வடகிழக்கு பருவமழையினை எதிர்கொள்ள தேவையான அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் தமிழ்நாடு மின் பகிர்மானக்கழகம் எடுத்துள்ளது. மின்விநியோகம் சார்ந்த குறைபாடுகளை சரிசெய்ய 24 மணிநேரமும் செயல்படும் தொலைபேசி சேவை மின்னகத்தை "**9498794987**" –ல் தொடர்பு கொள்ளுமாறு பொதுமக்கள் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

இந்த ஆய்வின் போது, கூடுதல் தலைமை செயலாளர்/ தமிழ்நாடு மின்வாரிய தலைவர் டாக்டர். ஜெ. ராதாகிருஷ்ணன், இ.ஆ.ப., தமிழ்நாடு பசுமை எரிசக்தி கழக மேலாண்மை இயக்குநர் டாக்டர். அனீஷ்சேகர் இ.ஆ.ப., தமிழ்நாடு மின் உற்பத்தி கழக மேலாண்மை இயக்குநர் திரு. ம. கோவிந்தராவ் இ.ஆ.ப., மின் தொடரமைப்பு கழகு மேலாண்மை இயக்குநர் திரு.டி. சிவகுமார், அனைத்து இயக்குநர்கள் மற்றும் உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.